# தலைவாசல் Thalaivaasal
எங்கள் பாரம்பரியம்
வீடு 01 வாசல் 43 | thalaivaasaltv@gmail.com | வெள்ளிக்கிழமை | நவம்பர் 13, 2020







## ஊஞ்சல் கயிறு கழுத்தை இறுக்கியதால் பறிபோன 7 வயது சிறுமியின் உயிர்

## யாழில் துயரம்

ஊஞ்சல் கயிறு கழுத்தை இறுக்கியதால் 7 வயதுச் சிறுமி பரிதாபகரமாக உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் யாழ்ப்பாணம், கோயில் வீதி, நல்லூரில் நடந்துள்ளது.

யாழ்ப்பாணம் பொஸ்கோ ஆரம்பப் பாடசாலையில் தரம் 2இல் கற்கும் உஜிதன் சாதுரியா (வயது- 7) என்ற சிறுமியே உயிரிழந்துள்ளார்.

கடந்த 3ஆம் திகதி வீட்டில் மாமரத்தில் கட்டப்பட்டிருந்த ஊஞ்சலை கதிரையில் ஏறி இழுத்துள்ளார் சாதுரியா.

ஊஞ்சல் அரைவாசி கிழிறங்கிய நிலையில், ஊஞ்சல் கயிற்றில் இருந்த முடிச்சை அவிழ்க்க முயன்றபோது, ஊஞ்சல் கயிறு சாதுரியாவின் கழுத்தைச் சுற்றியுள்ளது.

அப்போது கதிரை விழுந்ததால்

03

## தமிழ் மக்கள் தமது உறவுகளை அஞ்சலிக்கத் பூரண உரித்துண்டு!

### நாடாளுமன்றில் முழங்கிய சுமந்திரன்

தமிழ் மக்கள் தமது உயிரிழந்த உறவுகளை நினைவுகூர்வதற்கு அவர்களுக்குப் பூரண அதிகாரம் உண்டு. இந்தப் புனித மாதமான கார்த்திகையில்,

அவர்கள் தமது மரணித்த உறவுகளை அவர்களின் கல்லறைகளுக்குச் சென்று மலர் தூவி அஞ்சலித்து நினைவுகூர்வர். இதை எவரும் தடுக்க முடியாது.”

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.



நாடாளுமன்றத்தில் இன்று உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

03

## வலி.தெற்கு பிரதேச சபையின் பட்ஜெட் 14 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றம்

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் கட்டுப்பாட்டிலுள்ள வலி.தெற்கு பிரதேச சபையின் 2021ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் 14 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது.

03

# தாண்டவமாடும் கொரோனா

## இன்றும் 5 பேர் பலி

இலங்கையில் கொரோனா தொற்றுக்கு உள்ளாகி மேலும் 5 பேர் உயிரிழந்துள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் உறுதிப்படுத்தியுள்ளார்.

03

## அரசியல் கைதிகளை உடன் விடுவியுங்கள்!

### நாடாளுமன்றில் கஜேந்திரன் வேண்டுகோள்

“சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளின் உயிருக்கும் கொரோனா வைரஸால் அச்சுறுத்தல் - ஆபத்து ஏற்பட்டிருக்கின்றது.

எனவே, தமிழ் அரசியல் கைதிகளின் நிலைமையைக் கருத்தில்கொண்டு நிபந்தயைற்று அவர்களை விடுதலை செய்ய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.”

இவ்வாறு வலியுறுத்தினார் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச்



செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரன்.

நாடாளுமன்றத்தில் இன்று உரையாற்றும்போது அவர் மேலும் தெரி

03

## ஆலயங்களில் ஒன்றுகூட வேண்டாம் யாழ் அரச அதிபர் வேண்டுகோள்

தீபாவளி தினமாகிய நாளைய தினம் மக்கள் ஆலயங்களில் ஒன்றுகூடாதீர்கள் என யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் க, மகேசன் கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்துக்களின் பண்டிகையாகிய தீபாவளி பண்டிகை நாளைய தினம் கொண்டாடப்படவுள்ள நிலையில் தற்போது இந்து கோவில்களில் விரத பூசைகளும் இடம்பெற்று வருவதனால் பொதுமக்கள் கோயிலுக்கு சென்று ஒன்று கூடுவதை,

தவிர்க்க வேண்டும் இந்து கலாச்சார திணைக்களத்தினரால் ஆலயங்களுக்குள் 5 பேருக்கு மேல் செல்ல அனுமதிக்க வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.



எனவே யாழ்ப்பாணத்தில் மக்கள் வீடுகளில் இருந்தவாறு தீபாவளியை கொண்டாடுவது மட்டுமல்லாது ஆலயங்களுக்கு செல்வதையும் தவிர்த்து, வீடுகளில் இருந்தவாறு கொரோனா தொற்றிலிருந்து விடுபட வேண்டி இறைவனைப் பிரார்த்திக்கு

03

## அன்னதானம் வழங்கியது கொரோனா விதி மீறலாம்

## செல்வச்சந்நிதியில் சத்திரத்திற்கு பூட்டு



யாழ்.தொண்டமனாறு செல்வச்சந்நிதி ஆலய சுற்றாடலில் உள்ள அன்ன சத்திரத்தில் பாதுகாப்பு நடைமுறைகளை மீறி அன்னதானம் நடத்தப்பட்டதை தொர்ந்து சத்திரம் பூட்டப்பட்டுள்ளது.

தனிமைப்படுத்தப்பட்ட சட்டத்தை மீறி சுகாதார நடைமுறைகளை பிற்பற்றாமல் இன்று அன்னதானம் வழங்கப்பட்டதாக பருத்துறை பொது சுகாதார பரிசோதகருக்கு கிடைத்த தகவல் அடிப்படையில்,

குறித்த அன்ன சத்திரத்தை பொது சுகாதார பரிசோதகர்கள் பூட்டியுள்ளதுடன், சத்திரத்தில் இருந்த 5 பேர் அங்கேகே முடக்கப்பட்டுள்ளனர். அவர்கள் வெளியே வரவோ, வெளியிலிருந்து யாரும் உள் செல்லவோ அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.




**தரணி எங்கும் தமிழராய் இணைவோம்**

# இரத்ததான நிகழ்வு





தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் வலி கிழக்கு பிரதேசபை உறுப்பினர் அமரர் இலகுநாதன் செந்தூரன் (ஜே.பி) அவர்களின் அகவை நாளை முன்னிட்டு இரத்ததான நிகழ்வு இன்று நடைபெற்றது.

## கொழும்பில் 24 மணித்தியாலங்களில் 264 கொரோனா நோயாளர்கள் அடையாளம்


நாட்டில் கடந்த 24 மணித்தியாலங்களுக்குள் பதிவான 635 புதிய கொரோனா நோயாளர்களில் அதிகளவானோர் கொழும்பு மாவட்டத்திலேயே அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அதன்படி கொழும்பில் நேற்று மாத்திரம் 264 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதேநேரம் கம்பஹா மாவட்டத்தில் 136 பேரும் களுத்துறையில் 18 பேரும் இரத்தினபுரியில் 09 பேரும் புத்தளத்திலிருந்து நால்வரும் புதிய கொரோனா தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டனர்.

அதேபோல கண்டியிலிருந்து 25 பேரும் மாத்தறையிலிருந்து ஐவரும் காலியிலிருந்து 3 பேரும் ஹம்பாந்தோட்டையிலிருந்து இருவரும் புதிய கொரோனா நோயாளர்களுள் அடங்குகின்றனர்.

இதேநேரம், நுவரெலியா, இரத்தினபுரி, அம்பாறை, பதுளை, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் தலா ஒருவரும் புதிய கொரோனா தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டனர்.



## கொரோனா வைரஸ் தொற்று: குணமடைந்தோரின் எண்ணிக்கை 11 ஆயிரத்தைக் கடந்தது

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளானவர்களில் மேலும் 378 பேர் பூரணமாக குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர். சுகாதார அமைச்சு இன்று (வெள்ளிக்கிழமை) வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்கமைய, கொரோனா தொற்றுக்கு உள்ளானவர்களில் 11,031 பேர் இதுவரை பூரணமாக குணமடைந்துள்ளனர். நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றினால் பாதிக்கப்பட்டோரின் மொத்த எண்ணிக்கை 15 ஆயிரத்து 723ஆக காணப்படுகின்றது. இந்நிலையில், இன்னும் ஐயாயிரத்து 22பேர் தொடர்ந்தும் வைத்தியசாலைகளில் சிகிச்சைபெற்று வருகின்றனர்.

## பிரதேச ரீதியாக 10 பல்கலைக் கழகங்களை ஆரம்பிக்க நடவடிக்கை

புதிய அராங்கத்தின் கொள்கைத் திட்டத்திற்கு அமைவாக பிரதேச ரீதியாக 10 பல்கலைகழகங்களை ஆரம்பிப்பதற்கான கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றுள்ளது.

கல்வியமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தலைமையில் நேற்று கல்வியமைச்சில் இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றது.

உயர்கல்வி நிறுவனம் இல்லாத 10 மாவட்டங்களைத் தெரிவுசெய்து அந்த மாவட்டங்களில் பல்கலைக் கழகங்களை ஸ்தாபிப்பதற்கான யோசனை முன்வைக்கப்பட்டது.

அத்துடன் அதற்கான அமைச்சரவை அனுமதியை பெற்றுக் கொள்வது தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டதாக கல்வி அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வெளிநாட்டிலுள்ள இலங்கையர்களை நாட்டுக்கு அழைத்து வரும் நடவடிக்கை மீள ஆரம்பம்!

வெளிநாட்டிலுள்ள இலங்கையர்களை நாட்டுக்கு அழைத்துவரும் நடவடிக்கை மீள ஆரம்பிக்கப்படவுள்ளதாக இராணுவ தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டில் உள்ள இலங்கையர்களை நாட்டுக்கு அழைத்துவரும் நடவடிக்கை, கடந்த ஒக்டோபர் 12ஆம் திகதி, வெளிவிவகார அமைச்சு இடைநிறுத்தியது.

இந்நிலையில் இவ்விடயம் தொடர்பாக கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். சவேந்திர சில்வா மேலும் கூறியுள்ளதாவது, “வெளிநாடுகளிலுள்ள இலங்கையர்களை, அடுத்த வாரம் முதல் கட்டம் கட்டமாக நாட்டிற்கு அழைத்து வருவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மத்திய கிழக்கு உட்பட வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்களையே இவ்வாறு நாட்டிற்கு அழைத்து வருவதற்கு எதிர்பார்த்துள்ளோம்.

நாட்டில் கொரோனா அச்சுறுத்தல் அதிகரித்தமையினால் வெளிநாட்டிலுள்ள இலங்கையர்களை அழைத்து வருவதற்கான நடவடிக்கை நிறுத்தப்பட்டது.

மேலும், தனிமைப்படுத்தப்பட்ட நிலையங்கள் மற்றும் கொரோனா நோயாளிகளுக்கு சிகிச்சையளிக்கும் வைத்தியசாலைகளில் குறைந்த இடவசதி காணப்பட்டமையும் இதற்கு காரணமாகும்.

அத்துடன், வெளிநாட்டிலிருந்து அழைத்து வரப்படவுள்ள இலங்கையர்கள் அனைவரும், 14 நாட்களுக்கு கட்டாய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட வேண்டும்” என அவர் வலியுறுத்தியுள்ளார்.

## சிறைகளில் உள்ள எம்.பி.கள் அமர்வில் கலந்து கொள்ள தடை!



வெலிக்கடை மற்றும் மகசீன் சிறைச்சாலைகளில் இருந்து நாடாளுமன்றம் செல்லும் உறுப்பினர்களை சபை அமர்வுகளில் கலந்து கொள்வதை தவிர்க்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

சிறைச்சாலைகளில் கொரோனா வைரஸ் தொற்றின் தாக்கம் அதிகரித்துள்ளமையால், இவ்வாறான தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில், ஆளும் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான பிள்ளையான் என்றழைக்கப்படும் சிவனேசதுரை சந்திரகாந்தன், பிரேமலால் ஜயசேகர மற்றும் எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியூதீன் ஆகிய மூவரையும் சபைக்குள் அழைத்து வராமல் இருக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## யாழ் ஆய்வுகூடத்தில் இன்று 305 பேருக்கு கொரோனா பரிசோதனை

வட மாகாணத்தின் பல பாகங்களிலும் இருந்து பெறப்பட்டு யாழ் போதனா வைத்தியசாலை கொரோனா ஆய்வுகூட பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட 305 பேரின் பரிசோதனை முடிவுகள் சற்றுமுன்னதாக வெளியாகின.

யாழ் ஆய்வுகூட பரிசோதனை முடிவுகள் குறித்து யாழ். போதனா வைத்தியசாலை பணிப்பாளர் வைத்திய கலாநிதி த.சத்தியமூர்த்தி வெளியிடும் நாளாந்த அறிக்கை மூலம் இன்று (நவ-13) மேற்கொள்ளப்பட்ட பரிசோதனை முடிவுகள் வெளியிட்டுள்ளார்.

இதற்கமைவாக வட மாகாணத்தின் பல பாகங்களிலும் இருந்து பெறப்பட்ட 305 பேரின் மாதிரிகள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டதாகவும் எவருக்கும் கொரோனா தொற்று இல்லை என்பதாக முடிவு கிடைத்திருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# எம்.பி. பதவியை ஏற்குமாறு பசிலிடம் கோரிக்கை

நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை ஏற்றுக்கொண்டு மீண்டும் நாடாளுமன்றத்திற்கு பிரவேசிக்குமாறு முன்னாள் அமைச்சர் பெசில் ராஜபக்ஷவிடம், சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் குழு ஒன்று கோரிக்கை விடுத்துள்ளது.

கடிதம் மூலம் இந்த கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த அரசாங்கத்தினால் கொண்டுவரப்பட்ட அரசியலமைப்பின் 19ஆம் திருத்தச் சட்டத்தின் மூலமாக இரட்டை பிரஜாவுரிமை கொண்டவர் இலங்கையில் தேர்தலில் போட்டியிட முடியாது என்ற ஏற்பாடு நடைமுறைக்கு வந்தது.



இந்தநிலையில், கடந்த நாடாளுமன்ற தேர்தலில் முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷ போட்டியிருக்கவில்லை.

எவ்வாறு இருப்பினும் அண்மையில் புதிய அரசாங்கத்தினால் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட 20 ஆவது அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்தில் இரட்டை பிரஜாவுரிமை கொண்டவர்கள் நாடாளுமன்றத்திற்கு பிரவேசிக்க அனுமதி வழங்கப்பட்டது.

இவ்வாறான பின்னணியில் சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் அந்த பதவியில் இருந்து விலகி, அதற்கு பசில் ராஜபக்சவை நியமிக்க உள்ளதாக தகவல்கள் வெளியாகி வருகின்றன.

இவ்வாறான நிலையிலேயே மீண்டும் நாடாளுமன்றத்திற்கு பிரவேசிக்குமாறு சிறிலங்கா பொதுஜன முன்னணியின் குழு ஒன்று முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷ விடம் கோரிக்கை விடுத்துள்ளது.

# வாழை இலை வெட்டச் சென்ற பெண் மின்சார வேலியில் சிக்குண்டு பலி

அக்கரபத்தனை - பசுமலை பகுதியில் வீட்டுத்தோட்டம் ஒன்றில் விலங்குகளுக்காக பொருத்தப்பட்டிருந்த சட்ட விரோத மின்சார வேலியில் சிக்குண்ட பெண் ஒருவர் பலியானார்.

இந்தச் சம்பவம் பசுமலை பகுதியில் நேற்று இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் 70 வயதானவரும், நான்கு பிள்ளைகளின் தாயுமான ஒருவரே பலியானார்.

பூஜைக்காக வாழை இலை வெட்டச் சென்ற போதே இந்த அனர்த்தம் இடம் பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை அக்கரபத்தனை காவல்துறையினர் மேற்கொண்டு வருகின்றனர்.

# யாழ். பல்கலை மாணவர் அடிதடி விசாரணை அறிக்கை துணைவேந்தரிடம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கலைப்பீடத்தின் இரண்டாம் வருட மாணவர்களுக்கும், மூன்றாம் வருட மாணவர்களுக்குமிடையில் கடந்த மாதம் இடம்பெற்ற மோதல் சம்பவம் தொடர்பில் நடாத்தப்பட்ட விசாரணை அறிக்கை பல்கலைகழக துணை வேந்தரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

130 பக்கங்களைக் கொண்ட விரிவான விசாரணை அறிக்கை தம்மிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக பல்கலைக்கழக துணைவேந்தர் எஸ்.சிறிசற்குணராசா தெரிவித்தார்.

சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்வதற்கென, பல்கலைக்கழகப் பேரவையினால் நியமிக்கப்பட்ட தனி நபர் விசாரணை குழுவின் தலைவர் ஓய்வு நிலைப் பேராசிரியர் மா. நடராஜ சுந்தரத்தினால் இந்த விரிவான விசாரணை அறிக்கை கையளிக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில் குறித்த அறிக்கை அடுத்த வாரம் இடம்பெறவுள்ள பல்கலைக்கழக மாணவர் ஒழுக்காற்றுச் சபையில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

பின்னர் விசாரணை அறிக்கையின் உள்ளடக்கங்கள் தீவிரமாக ஆராயப்பட்டு, விசாரணை அதிகாரியினால் முன்மொழியப்பட்டுள்ள பரிந்துரைகளின் அடிப்படையில் பல்கலைக்கழக மாணவர் ஒழுக்காற்றுச் சபையினால் அடுத்தகட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## தமிழ் மக்கள்...

"வடக்கு, கிழக்கு தமிழ் மக்கள் போரில் உயிரிழந்த அவர்களது உறவுகளை நினைவுகூருகின்றமை மறுக்கப்படுகின்றது. சரியான எந்தக் காரணமும் இன்றி பொலிஸார் நீதிமன்றத்தை நாடி 106 ஆவது சரத்தின் கீழ், பொதுப்போக்குவரத்துக்கு

இடைஞ்சல் ஏற்படுத்தலாம் என்ற காரணத்தைக் கூறி நீதிமன்றங்களில் தடை உத்தரவைப் பெறுகின்றார்கள்.

தற்போது சட்ட அங்கீகாரமற்ற கொரோனா சட்டத்தின் கீழ் மக்களின் உணர்வுகளுடன் சம்பந்தப்பட்ட இவ்வாறான உரிமைகள் மறுக்கப்படலாம்.

தெற்கில் ஜே.வி.பியினர் உயிர்நீத்த தமது கட்சி சார்ந்தவர்களை நினைவுகூர்வதற்கு அனுமதி வழங்கப்படுகின்றது.

ஆனால், எமது தமிழ்ப் பிரதேசங்களில் மட்டும் அவர்களின் உரிமைகள் மறுக்கப்படுகின்றமை நியாயமற்ற ஒன்று.

தமிழ் மக்களுக்காக உயிர்நீத்தவர்களை நினைவுகூர்கின்ற மாதமே இந்த கார்த்திகை மாதம். இந்தப் புனித மாதத்தில் தமது சகோதரர்கள்,

பிள்ளைகள் மற்றும் உறவுகளை நினைவுகூர்வதற்கு அவர்களுக்குப் பூரண உரித்து உள்ளது.

பிரிவு 106 இன்கீழ் பொதுப் போக்குவரத்துக்கு இடையூறு விளைவித்தல் என்ற காரணத்தைக் காட்டி நீதிமன்றத்தில் தடை உத்தரவு பெறுகின்ற செயற்பாட்டை ஏற்கமுடியாது.

தமிழ் மக்கள் பொதுப்போக்குவரத்துக்கோ, ஏனைய மக்களுக்கோ எந்த இடையூறும் விளைவிக்காமல்தான் தமது உறவுகளை அவர்களின் துயிலும்,

இல்லங்களுக்குச் சென்று அங்குள்ள கல்லறைகளில் மலர் தூவி அஞ்சலித்து நினைவுகூர்கின்றார்கள். இதை எவரும் தடுக்க முடியாது. அது அவர்களின் உரிமை" - என்றார்.

## தாண்டவமாடும்...

அவர்களுள் ஒருவர் கிரான்பாஸ் பகுதியை சேர்ந்த 83 வயதுடைய பெண் ஒருவர் என தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் சிலாபம் பகுதியை சேர்ந்த 68 வயதுடைய ஆண் ஒருவரும் இவ்வாறு உயிரிழந்துள்ளததாக தெரிவிக்கப்படுகின்றது.

ரத்மலான பகுதியை சேர்ந்த 69 வயதுடைய ஆண் ஒருவரும் உயிரிழந்துள்ளததாக தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் கொழும்பு 13 பகுதியை சேர்ந்த 64 மற்றும் 78 வயதுடைய இருவர் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அதனடிப்படையில் இலங்கையில் கொரோனா தொற்றினால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 53 ஆக அதிகரித்துள்ளது.

## ஆலங்களில்...

மாறு அரசாங்க அதிபர் கோரிக்கை விடுத்துள்ளார்.

குறிப்பாக வடக்கு மாகாண சுகாதார திணைக்களத்தினரால் ஏற்கனவே ஆலயங்களுக்குரிய சுகாதார விதிமுறைகள் தொடர்பான அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது எனவே,

பொதுமக்கள் ஆலயங்களுக்கு சென்று ஒன்றுகூடுவதை தவிர்த்து வீடுகளிலிருந்து அமைதியான முறையில் இவ்வருட தீபாவளி பண்டிகையை கொண்டாடுமாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

## வலி. தெற்கு...

வலி.தெற்கு பிரதேச சபையின் சிறப்பு அமர்வு இன்று வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

இதன்போது 2021ஆம் ஆண்டு வரவு செலவுத்திட்டம் பிரதேச சபை தலைவர் தர்ஷனால் சமர்ப்பிக்கப்பட்டது.

வரவு - செலவுத் திட்டத்தை ஆதரித்து ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர் பாலசிங்கம் சுரேஷ் முன்மொழிந்தார். தமிழ் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர் அன்ரன் வழிமொழிந்தார்.

அதனைத் தொடர்ந்து வரவு செலவுத் திட்டம் சபையில் வாக்கெடுப்புக்கு விடப்பட்டது.

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் 11 பேர், அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் உறுப்பினர்கள் நால்வர், தமிழர் விடுதலைக் கூட்டணியின் உறுப்பினர் இருவர் மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர் மூவர் என 20 பேர் ஆதரவாக வாக்களித்தனர்.

ஈபிடிபியின் 4 உறுப்பினர்களும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள் இருவர் எதிராக வாக்களித்தனர். சிறிலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் தலா 2 உறுப்பினர்கள் சபைக்கு சமூகமளிக்கவில்லை.

அதனால் வலி.தெற்கு பிரதேச சபையின் 2021ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் 14 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது.

இதேவேளை, இம்முறை ஒவ்வொரு வட்டாரத்தின் அபிவிருத்திக்கும் 30 லட்சம் ரூபாயும் ஒவ்வொரு உறுப்பினரால் முன்வைக்கப்படும் முன்மொழிவுக்கு ஒன்றரை லட்சம் ரூபாயும் வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## அரசியல் கைதிகளை...

வித்ததாவது:-

"சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளின் உயிருக்கும் கொரோனா வைரஸால் அச்சுறுத்தலும் ஆபத்தும் ஏற்பட்டுள்ளது.

தொற்றா நோய் காரணமாகவே பலருக்கு இந்தக் கொரோனாத் தொற்று பாதிப்பை ஏற்படுத்தி வருகின்றது என ஜனாதிபதியும் கூறியிருக்கின்றார்.

அந்தவகையில் மிகவும் கொடிய சட்டமாகிய பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டுள்ள இந்தத் தமிழ் அரசியல் கைதிகளில் பலர் இன்று நீரிழிவு நோய் உட்பட தொற்றா நோய்களால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

ஆகவே, தமிழ் அரசியல் கைதிகளின் நிலைமையைக் கருத்தில்கொண்டு நிபந்தனையற்று அவர்களை விடுதலை செய்ய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். அல்லது குறைந்த பட்சம் பிணையில் சரி அவர்களை விடுவிக்க வேண்டும்" - என்றார்.

## ஊஞ்சல் கயிறு...

சிறுமி ஊஞ்சல் கயிற்றில் சிக்கித் தொங்கியுள்ளார்.

வீட்டிலிருந்தவர்கள் விரைந்து செயற்பட்டு சிறுமியை மீட்டு, யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றனர்.

அங்கு சிகிச்சை பெற்றுவந்த சிறுமி நேற்று சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார்.

இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் மேற்கொண்டார்.

# வடக்கில் கடலட்டை பிடிக்க நிபந்தனையுடன் அனுமதி



வடக்கு கடல் பிரதேசத்தில் எதிர்வரும் திங்கட் கிழமை (16) தொடக்கம் கடலட்டை பிடிப்பதற்கு அனுமதிக்குமாறு வடக்கு மாகாணத்தினை சேர்ந்த கடற்றொழில் திணைக்களத்தின் மாவட்ட பணிப்பாளர்களுக்கு கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பணிப்புரை விடுத்துள்ளார்.

எனினும் குறித்த அனுமதியானது ஸ்கின் டைவிங் எனப்படும் சாதாரண சுழியோடி முறையின் ஊடாக மாத்திரமே மேற்கொள்ள அனுமதிக்கப்பட வேண்டும் எனவும் ஸ்கியூபா எனப்படும் சிலிண்டர் பயன்படுத்தி கடலட்டை பிடிக்க அனுமதிக்க முடியாது எனவும் தெரிவித்துள்ளார்.

கடலட்டை பிடிப்பது தடை செய்யப்பட்ட தொழிலாக இருந்த நிலையில், நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் அடிப்படையில் குறித்த தொழிலுக்கான அனுமதி நாடு முழுவதும் வழங்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், கொரோனா பரலவலை கட்டுப்படுத்துவதற்கு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளில் ஒன்றாக சில பிரதேசங்களில் கடலட்டை பிடிப்பதற்கும் தற்காலிக தடை விதிக்கப்பட்டிருந்தது.

எனினும், கொரோனாவை கட்டுப்படுத்துவதற்கு முழு நாட்டையும் முடக்காமல் அடையாளப் படுத்தப்படுகின்ற பிரதேசங்களை மாத்திரம் தனிமைப்படுத்துவன் ஊடாக கட்டுப்படுத்துவது என்ற அரசாங்கத்தின் தற்போதைய தீர்மானத்திற்கு அமைவாக வடக்கு கடல் பிரதேசத்தில் கடலட்டை பிடிப்பதற்கான அனுமதியை நிபந்தனையுடன் வழங்குமாறு கடற்றொழில் அமைச்சர் மாவட்ட திணைக்களங்களின் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

# 5 இறப்புகள் மாத்திரமே கொரோனாவால் ஏற்பட்டவை

இலங்கையில் 5 இறப்புகள் மாத்திரமே கொரோனாவால் ஏற்பட்டவை என இராணுவத்தளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

சுகாதார அமைச்சின் செயலாளர் இதை உறுதிப்படுத்தியதாக இராணுவத் தளபதி மேலும் தெரிவித்துள்ளார்.

கொரோனா நோயாளிகள் வீடுகளில் இறந்தது குறித்து நேற்று (வியாழக்கிழமை) கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

இதன்போது மேலும் தெரிவித்த அவர், நாட்டின் 5 இறப்புகள் மாத்திரமே கொரோனாவால் ஏற்பட்டவை எனவும் ஏனைய அனைத்தும் நாட்பட்ட நோய்களால் ஏற்பட்டவை எனவும் தெரிவித்துள்ளார்.



நாட்பட்ட நோய்களால் பாதிக்கப்பட்டோர் ஊரடங்கு மற்றும் முடக்கல் நிலைகளின்போது வீடுகளில் தங்கியிருக்காது தேவையான போது மருத்துவ சிகிச்சை பெற வேண்டும் என தெரிவித்துள்ளார்.

இலங்கையில் ஒரு சிறந்த சுகாதார சேவை உள்ளது என்றும் யாரும் மறைக்கவோ அல்லது மருத்துவ சிகிச்சை பெறுவதைத் தவிர்க்கவோ கூடாது என்றும் அவர் கூறியுள்ளார்.

முடக்கல் நிலையில் இருக்கும்போது கூட அவசர மருத்துவ தேவைகள் தேவைப்படுவோர் அம்புலன்சில் மருத்துவமனைகளுக்கு வரக்கூடிய ஒரு பொறிமுறையை தாங்கள் நிறுவியுள்ளோம் எனவும் அவர் கூறியுள்ளார்

வைரஸ் பாதித்த அனைவருமே இறந்துவிட மாட்டார்கள் என்பதை பொதுமக்கள் நினைவில் கொள்ள வேண்டும் எனவும் வைரஸ/க்கு நேர்மறை சோதனை செய்யப்பட்டவர்களில், 0.2 சதவீதம் பேர் கொரோனா காரணமாக இறந்தனர் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

### சடலங்களை அடக்கம் செய்யும் விவகாரம்:

# இலங்கை அரசாங்கத்துக்கு ஐ.நா. கடிதம்

உயிரிழந்த உடல்களின் தகனம் என்பது அவரவர் கலாச்சார தேர்வுகளை அடிப்படியாக கொண்டவை என ஐ. நா.அபிவிருத்தி திட்டத்தின் பிரதிநிதியுமான ஹனா சிங்கர், இலங்கை அரசாங்கத்துக்கு குறிப்பிட்டுள்ளார்.

கொரோனா வைரஸினால் உயிரிழந்த முஸ்லிம்களின் உடல்கள் தகனம் செய்யப்படுவதற்கு, முஸ்லிம் சமூகம் தொடர்ந்து எதிர்ப்பு தெரிவித்து வருகின்றது.

அதேபோன்று முஸ்லிம் சமூகத்தின் கோரிக்கை நியாயமானது என்றதன் அடிப்படையில் பல சமூக அமைப்புக்களும் அவர்களுக்கு ஆதரவாக கருத்துக்களை வெளியிட்டு வருகின்றன.

இந்நிலையிலேயே, இவ்விடயம் தொடர்பாக இலங்கை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிற்கு, ஐ.நா.அபிவிருத்தி திட்டத்தின் பிரதிநிதியுமான ஹனா சிங்கர் எழுதியுள்ள கடிதத்தில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

குறித்த கடிதத்தில் அவர் மேலும் கூறியுள்ளதாவது, "தொற்று நோயால் இறந்தவர்கள் மூலம் வைரஸ் பவவுவதைத் தடுப்பதற்கு, அந்த உடலங்கள் தகனம் செய்யப்பட வேண்டும் என்ற பொதுவான அனுமானம், ஆதாரங்களால் உறுதிப்படுத்தப்படவில்லை.

அதற்கு பதிலாக தகனம் என்பது அவரவர் கலாசார தேர்வுகளை அடிப்படையாக கொண்டவை' எனஅவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, கொரோனா வைரஸினால் உயிரிழந்தவர்களை அடக்கம் செய்யும்போது சிறுபான்மையினரின் உரிமைகளை அரசாங்கம் மதிக்கவேண்டும் என சர்வதேச மன்னிப்புச் சபை வேண்டுகோள் விடுத்துள்ளது.

மேலும், கொரோனா வைரஸினால் உயிரிழந்தவர்களின் உடல்களை அடக்கம் செய்யலாம் என உலக சுகாதார ஸ்தாபனம் வெளியிட்டுள்ள வழிகாட்டுதல்களை அரசாங்கம் பின்பற்றவேண்டும் எனவும் அந்த சபை வேண்டுகோள் விடுத்துள்ளது.

# சிறைச்சாலை கூரை மீது ஏறி கைதிகள் ஆர்ப்பாட்டம்

களுத்துறை சிறைச்சாலையின் கைதிகள் சிலர் சிறைச்சாலை கூரையின் மீது ஏறி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். இன்று (13) மாலை முதல் அவர்கள் இவ்வாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.


15 பேர் கொண்ட குழு ஒன்றே இவ்வாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. தங்களுக்கு உடனடியாக பிணை வழங்குமாறு கோரி இவ்வாறு கைதிகள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஹெரோயின் வைத்திருந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டவர்களே இவ்வாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

# இணைய வழியில் ஆரம்பமாகிய கிளைமத்தோன் யாழ்ப்பாணம் 2020

காலநிலை மாற்றம் தொடர்பில் இளையோர் ஒன்றிணையும் சர்வதேச நிகழ்வு யாழ்ப்பாண நகரத்தில் இரண்டாவது வருடமாக 13.11.2020 வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு இணைய வழியில் திருக்குறள் மற்றும் தமிழ் மொழி வாழ்த்துடன் ஆரம்பமாகியது.

கிளைமத்தோன் நிகழ்வு தொடர்பிலான அறிமுகவுரையினை நிகழ்வு ஒருங்கிணைப்பு குழு உறுப்பினர் நிவேதா சிவராஜா (செயன்முறை வழிகாட்டி - யாழ் பல்கலைக்கழகம்) அவர்களால் வழங்கப்பட்டது.




யாழ் மாநகர சபை முதல்வர் இமானுவேல் ஆர்னோல்ட், கலாநிதி எதிர்வீரசிங்கம் ( கல்வியாளர் , ஆய்வாளர்), திரு சாண் நந்தகுமார் ( ITEE Foundation தலைவர்) ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

சூழலியல் தொடர்பாடல்துறையினை சார்ந்த தகைசார் பேராசிரியர் சிறீஸ்கந்தராசா அவர்கள் காலநிலை நெருக்கடியினை உரையாடலும் எதிர்கொள்ளலும் எனும் தலைப்பில் சிறப்புரையாற்றியமை சிறப்பான அம்சமாகும்.